மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.
2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 02ம் நாள் சனிக்கிழமை
இடைநிலை மனு எண்.04/2024
இன்
அசல் வழக்கு எண்.10/2023
------

மாரியம்மாள் .. மனுதாரர்/வாதி

/எதிர் /

தலைவர்,
சிறுகுளம் ஊராட்சி,
சிறுகுளம். ..எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனுவானது என் முன்பு 21.07.2025-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் /வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A. ரஞ்சிதராஜா, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை, மனு அபிடவிட்டு, எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது 19.08.2024 அன்று அசல் வழக்கை தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவை ரத்து செய்து வழக்கை மீண்டும் கோப்புக்கு எடுத்து வழக்கை மேல்நடத்த அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி கட்டளை 9 விதி 9 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர்/ வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-</u>**

**2.1.** மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கை எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் மற்றும் இதர பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் சீர்திருத்தம்

செய்வதற்காக 02.07.2024 அன்று வாய்தா ஏற்பட்டிருந்தது. அன்றைய தினம் அசல் வழக்கை சீர்திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்காததாலும், மனுதாரரின் ஆஜரின்மை காரணமாகவும் 19.08.2024 அன்று அசல் வழக்கானது தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் மனுதாரரின் குழந்தைக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்த காரணத்தால் குழந்தையை கவனிக்க வேண்டியிருந்தது என்றும், மனுதாரரின் கணவர் வெளிநாட்டில் வேலை செய்து வருவதால் உதவிக்கு ஆள் இல்லாத காரணத்தால் மனுதாரரால் உரிய நேரத்தில் வழக்கறிஞரை சந்தித்து கையொப்பம் செய்து கொடுக்க இயலவில்லை. தற்போது வழக்கறிஞரை சந்தித்து கேட்டபோது தான் வழக்கு பற்றிய விபரம் தெரிய வந்துள்ளது. இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. எனவே 19.08.2024 அன்று தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்து மேல் நடத்த அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்**:–

**3.1.** தாவா மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. தாவா வழக்கனாது நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா வழக்கில் வழக்குரையில் சீர்திருத்தம் செய்வதற்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் தள்ளுபடி செய்யப்பட்டதாக கூறியுள்ளார். தாவா மனுவில் கண்ட எதிர்மனுதாரர்/பிரதிவாதி பஞ்சாயத்து தலைவர் ஆவார். அவரது பதவிக்காலம் கடந்த ஜனவரி 5ம் தேதியுடன் நிறைவு பெற்றுவிட்டதால் தவா மனுவை மனுதாரர் சீர்திருத்தம் செய்து மனு தாக்கல் செய்ய வேண்டும். எனவே மனுதாரர் மனு தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

5. மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத் தக்கதா?

6. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**7. <u>தீர்வு</u>**

**6.1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. கடந்த 19.08.2024 அன்று தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க உத்தரவிட வேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவிற்கு மனுதாரர் கூறும் காரணம் என்னவென்றால், மனுதாரர் கைக்குழந்தையை வைத்திருந்ததாலும், குழந்தைக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தினாலும், மனுதாரரின் கணவர் வெளி நாட்டில் வேலை செய்து வருவதால் உதவிக்கு ஆள் இல்லாத காரணத்தினால் வழக்கறிஞரை சந்தித்து மனுவில் கையொப்பம் செய்து கொடுக்க இயலவில்லை என்றும், தற்போது மனுதாரர் வழக்கறிஞரை சந்தித்து வழக்கு பற்றிய விபரம் கேட்டபோது தான் தெரிய வந்துள்ளதால் 19.08.2024 அன்று வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்து மேல்நடத்த உத்தரவிட வேண்டி இந்த மனு தாக்கல்.

**6.2.** எதிர்மனுதாரர் தன்னுடைய ஆட்சேபணையில், தாவா வழக்கில் வழக்குரையில் சீர்திருத்தம் செய்வதற்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் தள்ளுபடி செய்யப்பட்டதாக கூறியுள்ளார் என்றும், எதிர்மனுதாரர் பஞ்சாயத்து தலைவர் என்பதாலும், அவரது பதவிக்காலம் ஜனவரி 5ம் தேதியுடன் நிறைவு பெற்றுவிட்டதால் மனுதாரர் மனுவை சீர்திருத்தம் செய்து மனு தாக்கல் செய்ய வேண்டுமென்பதால் மனுதாரர் மனு தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

**6.3**. மனு மற்றும் எதிருரையை பரிசீலனை செய்து பார்த்ததில் வழக்கின் சூழ்நிலை மற்றும் சங்கதிகளை கருத்தில் கொண்டும் மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதி மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**<u>7. இறுதி முடிவு</u>**

இறுதியாக, இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02-ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்துார்.

**<u>சாட்சி, சான்றாவணங்கள்</u>**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்துார்.

மாவட்டஉரிமையியல் நீதிமன்றம்,
சாத்துார்.
இ.ம.எண்.04/2024
இன்
அ.வ.எண்.10/2023
**உத்தரவு**
நாள்-02.08.2025.